# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2057, - பிப்ரவரி 14, 2026 | Weekly E-paper • February 14, 2026




# மீண்டும் விஜய்... மீண்டும் ஒருவர் பலி!

சுப. வீரபாண்டியன்

**ஒன்றியத்தில் கூட்டாட்சி! தமிழ்நாட்டில் சுயாட்சிதான்!**

எழில்.இளங்கோவன்

**வெல்லப் போவது யார்?**

தலையங்கம்

**அறிவொளிப் பாய்ச்சலில் அகிலம் போற்றும் திராவிட மாடல்!**

நெல்லை பாபு

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - பிப்ரவரி 14, 2026

Weekly E-paper ● February 14, 2026


# மீண்டும் விஜய்... மீண்டும் ஒருவர் பலி!

**சுப. வீரபாண்டியன்**

ஒவ்வொரு முறையும் நடிகர் விஜய் மக்களைச் சந்திக்கிறேன் பேர்வழி என்று வெளியில் வரும்போது, சில உயிர்ப் பலிகள் நடந்து கொண்டே இருக்கின்றன!

கூட்டத்தை ஏற்பாடு செய்கிற முறை, கூட்டம் நடத்தப்படுகிற நேரம் இவைகளே, கூட்டத்திற்கு வருகின்றவர்கள் இறந்து போவதற்குக் காரணங்களாக இருக்கின்றன!



பொதுவாக, மாலை நேரங்களில் பொதுக் கூட்டங்களை நடத்துவதுதான் வழக்கம். ஆனால் வசதியாக வாழ்ந்து பழகிய விஜய், படப்பிடிப்பிற்கு வந்து போவது போல, காலையில் வீட்டிலிருந்து புறப்பட்டு, மாலை வீட்டிற்குத் திரும்பி விட வேண்டும் என்று நினைக்கிறார் போலும்! எனவே பகல் 12 மணி, 2 மணி என்றுதான் கூட்டங்களை ஏற்பாடு செய்கின்றனர்.

முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் போன்ற ஒரிருவரைத் தவிர்த்து, அந்தக் கட்சியில் வேறு யாருக்கும் கூட்டங்களை எல்லாம் ஏற்பாடு செய்து பழக்கம் இல்லை என்று தெரிகிறது! எனவே வந்தவர்கள் அமர்வதற்கு நாற்காலிகள் கூட இல்லை. மூன்று மணி நேரம், வெயிலில் அவர்கள் நின்று கொண்டே இருக்கிறார்கள். அந்தச் சூழலில் மயக்கம் வருவது இயல்பு தானே!

சேலத்தில் நடைபெற்ற கூட்டத்திலும், மூன்று பெண்கள் உள்பட ஐவர் மயக்கம் போட்டு இருக்கிறார்கள். அவர்களுள் சுராஜ் என்னும் வடநாட்டு இளைஞர் ஒருவர் இறந்தே போய்விட்டார்! இனிமேல் அவருடைய இல்லத்தினரை ஆறுதல் பெற்றுச் செல்வதற்காகப் பனையூருக்கு வரவழைப்பார்கள். அவ்வளவு தூரம் போய் அவர்கள் ஆறுதலை வாங்கி வர வேண்டும். அந்தச் சிரமம் வேறு இருக்கிறது!

இந்த நிலையில், திமுக அரசின் நிர்வாகம் சரியில்லை என்று அவர் குறை சொல்கிறார். அவர் ஆட்சிக்கு வந்தால்,நிர்வாகத்தை அப்படியே கிழித்துத் தொங்கப் போட்டு விடுவாராம்!

முதலில் தன்னுடைய வரி பாக்கியைக் கட்டிவிட்டு அடுத்த கூட்டத்திற்கு அவர் வந்தால் நாமும் பாராட்டலாம். தான் திரைப்படத்தில் வாங்கிய தொகையில் கருப்பு எவ்வளவு, வெள்ளை எவ்வளவு என்று பிரித்துச் சொல்லிவிட்டால், அவரைப் போற்றி ஒரு மாநாடு கூட நடத்தலாம்!

காசு கொடுத்தால் ஓட்டு வாங்கி விடலாம் என்னும் எண்ணத்தை அவர் முற்றாக அழிக்கப் போகிறாராம். நல்ல செயல்தான். அதே மாதிரி, திரைப்படத்தில் நடித்து விட்டால் போதும், அவரைப் பார்க்க நாட்டில் கூட்டம் கூடும், அரசியலில் உள்ளே நுழைந்து அவர் கட்சி தொடங்கி விடலாம் என்பன போன்ற நிலைகளையும் சேர்த்து அழித்து விடுவார் என்றால், அது சிறப்பாக இருக்கும் !

பனையூரை விட்டு வெளியில் வா வா என்று தன்னை அழைக்கிறார்கள் என்கிறார் விஜய். வேண்டாம், இனி யாரும் அவரை அழைக்காதீர்கள். ஒவ்வொரு முறை அவர் வெளியில் வரும் போதும் எத்தனை இறப்புகள் நேரும் என்று சொல்ல முடியவில்லை. மக்கள் அஞ்சுகிறார்கள்!

# ஒன்றியத்தில் கூட்டாட்சி! தமிழ்நாட்டில் சுயாட்சிதான்!

**எழில்.இளங்கோவன்**

தமிழ்நாட்டின் கடந்தகால அரசியல் வரலாற்றைத் தெரிந்துகொள்ளாமல் சில காங்கிரஸ்காரர்கள், அரசியல் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். 'ஆட்சியில் பங்கு, அதிகாரத்திலும் பங்கு' கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள் அவர்கள். இன்று திமுகவின் கூட்டணியில் காங்கிரஸ் இருக்கிறது, மறுக்கவில்லை. 1967ஆம் ஆண்டில் காங்கிரஸ் என்னவாக இருந்தது தமிழ்நாட்டில்?

பெருந்தலைவர் காமராசர் தன் 'கே' பிளான் அடிப்படையில் முதல்வர் பதவியில் இருந்து விலகியவுடன், 1963 ஆம் ஆண்டில் பக்தவச்சலம் முதலமைச்சரானார் தமிழ்நாட்டில். அப்போது ஏற்பட்ட பஞ்சத்தில் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவருவதை விடுத்து 'எலிக்கறி'யைச் சாப்பிடச்சொன்னார் அவர், மக்களிடம். 1964ஆம் ஆண்டு வரிந்துகட்டிக்கொண்டு அன்றைய மத்திய காங்கிரஸ் ஆட்சி இந்தியை ஆட்சிமொழியாகவலுக்கட்டாயமாகத் திணித்ததன் விளைவாக எழுந்த மாணவர்கள் போராட்டத்தில் மாணவர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டார்கள், கொந்தளித்தது தமிழ்நாடு.

1967ஆம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் ஆட்சியைச் சுத்தமாகத் துடைத்து எறிந்தனர் தமிழக மக்களும், திராவிட முன்னேற்றக் கழகமும். இன்றுவரை திமுக தயவில் லாமல் அதனால் வலிமை பெற்று எழமுடியவில்லை, தமிழ்நாட்டில்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் "மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி" என்ற கொள்கை வழியில் நிற்கும் திமுகவிடம், ஆட்சியில் பங்கு கேட்டுச் சிலகாங்கிரசார் குறுக்குச் சால் ஓட்டத் தொடங்கியுள்ளனர். தேர்ந்த அரசியல் ஆளுமையான முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,"தமிழ்நாட்டில் அதுவெல்லாம் ஒத்துவராது" என்று சொல்லிவிட்டார், கதை முடிந்தது.

நாடாளுமன்ற எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்களும், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அவர்களும் இந்த விசயத்தை, நிதானமாகவும், அரசியல் முதிர்ச்சியோடும் கையாளுகின்றார்கள். திமுக, காங்கிரஸ் கூட்டணியின் ஒற்றுமை, அதன் தேவை அறிந்து இவர்களால் நகர்த்தப்



படும் தேர்ந்த அரசியல் நகர்வு, "திமுக, காங்கிரஸ் கூட்டணி உடையும்" என்ற பாஜக-அதிமுகவின் ஆசையைக் கசக்கிப் பிழிந்து போட்டுவிட்டது. மாறாக பலமாகவே அது தொடர்கிறது. அதேசமயம் ஒன்றுக்கும் உதவாத உதிரியாய் துக்ளக் மேடைகளிலும், பொதுவெளியிலும் உளறித் திரியும் திருச்சி வேலுச்சாமி போன்றவர்களை நாம் கணக்கில் எடுக்க வேண்டிய அவசியமே இல்லை.

அதிகாரப்பூர்வமாகக் காங்கிரஸ் தலைமை ஆட்சியில் பங்கு கேட்கவில்லை, இதுவரை. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை ஆட்சியில் பங்கு என்பதை டில்லி தலைமையும், திமுக தலைமையும் பேசிக்கொள்வார்கள் என்று நழுவிக் கொண்டார். ஆசைப்படுவதில் தவறில்லை, அதற்கான தகுதியை வளர்த்துக்கொள்ள வேண்டாமா? அதுசரி, டில்லியில் ஆட்சி என்னாயிற்று? ஆணிவேரை விட்டுவிட்டு, சிம்பு வேரை அசைக்கப் பார்க்கின்றனர், காங்கிரசார்.

ஜவகர்லால் நேரு, இந்திராகாந்தி ஆட்சிக் காலத்தின்போது கொண்டுவரப்பட்ட, மக்களுக்கான அரசு பொதுத்துறை நிறுவனங்களை இன்று தனியாருக்கு விற்றுக்கொண்டு இருக்கிறது பாஜக ஒன்றிய ஆட்சி.

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## வெல்லப்போவது யார்?

திமுக ஊழல் கட்சி, அது ஊழல் ஆட்சி. மக்கள் ஸ்டாலின் ஆட்சியை வெறுக்கிறார்கள். அதிமுக கூட்டணி 200 தொகுதிகளில் வெற்றிபெறும் என்று எடப்பாடி பழனிச்சாமி போகிறபோக்கில் பேசிக்கொண்டு இருக்கிறார்.

கருணாநிதிஎன்றபெயரும்,ஸ்டாலின்என்றபெயரும் தமிழ்ப்பெயர்களா என்று திருமாவளவனுடன் முட்டிக்கொண்டு இருக்கிறார் டி.டி.வி. தினகரன், அவரின் அரசியல் அவ்வளவுதான்.

ஆட்சியில் பங்கு தருகிறோம் கூட்டணிக்கு வாருங்கள் என்று கூவிக்கூவி அழைப்புவிடுத்த தவெக தனிமரமாக நிற்கிறது.

திமுகவுக்கு சரியான எதிரி யாரும் இல்லை என்று பேசும் ஸ்டாலினுக்கு, என்னை நினைவுக்கு வரவில்லையா? என்று அவ்வப்போது தமாஷ் செய்துகொண்டு இருக்கிறார் சசிகலா.

தேர்தல் வரும்போது மட்டும் தமாகாவின் ஒரே நிரந்தர உறுப்பினர் ஜி.கே.வாசன் என்டிஏ கூட்டணிக்குள் ஒளிந்துகொள்வார்.

பிரேமலதா அம்மையாரின் அரசியல் வியூகத்தைப் புரிந்து கொள்ள இன்னும் யாரும் பிறக்கவில்லை.

டாக்டர் கிருஷ்ணசாமி, நாங்கள் இருக்கும் கூட்டணிதான் ஆட்சியைப் பிடிக்கும் என்று அவ்வப்போது வந்து பஃபூன் வேலையைக் காட்டுவார். எந்தக் கூட்டணி என்றால் தெரியாது.



நயினார் நாகேந்திரன், அண்ணாமலை இருவரும் அமித்ஷாவைப் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

திமுகழகத் தலைவர் ஸ்டாலின் மட்டும்தான் கிரேக்க வீரன் 'ஹெர்குலிஸ்' போல, தேர்தல் களத்தில் ஓடிக்கொண்டு இருக்கிறார், தன் கூட்டணியுடன்.

இன்னும் இரண்டு மாதங்களில் வெல்லப்போவது யார்?

ஸ்டாலின், ஸ்டாலின், ஸ்டாலின்!

ஆம், திமுக கூட்டணி!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## முன்பக்கத் தொடர்ச்சி...

மகத்தான நேருவின் திட்டங்களை, சிந்தனைகளைச் சிதைத்து, அவரின் மீது களங்கம் கற்பித்துக்கொண்டு இருக்கிறது. காந்தியடிகளின் பெயரில் இருந்த 100 நாள் வேலைத்திட்டத்தைச் சிதைத்து, காந்தியின் பெயரை இருட்டடிப்பு செய்திருக்கிறது பாஜக. டிரம்ப்பின் விரலசைவில் ஆடும் மோடியின் மக்கள் விரோத ஆட்சிக்கு எதிராக ராகுல்காந்தி போராடிக் கொண்டு இருக்கிறார்.

எதைப்பற்றியும் கவலைப்படாமல் இந்துமதவெறி அரசியலை முன்வைத்து நாட்டு மக்களிடையே பிரிவினையை, வேற்றுமையை வளர்த்து, 'ஒரேராஜ்யம் -ராமராஜ்யம்' என்று வளர்ந்து வருகிறது பாஜக ஒன்றியம்.

நாட்டில், மக்கள் மீது கவிழ்ந்து கொண்டு இருக்கும் மதவாதப் பேரபாயத்தைப் பற்றிச் சிந்திக்காமல், ராகுல்காந்திக்குத் துணை நிற்காமல், தமிழ்நாட்டிற்கு ஒத்துவராத 'பங்கு' களைப்பற்றிப் பேசி வரும் பிரவீன் சக்கரவர்த்தி, மாணிக்கம் தாகூர், ஜோதிமணி போன்றோர், காங்கிரஸ் தலைவர்களான ப.சிதம்பரம், பீட்டர் அல்போன்ஸ், கோபண்ணா போன்றவர்களைப் பார்த்தாவது, அரசியல் பேசவேண்டும்.

கடைசியாக "மக்கள் பணிசெய்ய தோழமையிடம் பங்கு கேட்கிறோம்" என்று சுதியை மாற்றிவிட்டார் மாணிக்கம் தாகூர். இதில் என்ன லாஜிக் இருக்கிறது? தெரிந்தவர்கள் சொல்லுங்கள்.

"ஒன்றியத்தில் கூட்டாட்சி!

தமிழ்நாட்டில் சுயாட்சி" முதல்வர் ஸ்டாலின் சொல்வதுதான் சரி!

# அறிவொளிப் பாய்ச்சலில் அகிலம் போற்றும் திராவிட மாடல்!

நெல்லை பாபு

எல்லோருக்கும் எல்லாம்" என்ற உன்னதக் கோட்பாட்டைத் தனது உயிர் மூச்சாகக் கொண்டு, சமூக நீதிக் களத்தில் சரித்திரம் படைத்து வரும் திராவிட மாடல் நாயகர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ஆட்சி, தமிழ்நாட்டின் கல்வி வரலாற்றில் ஒரு பொற்காலம்.

தந்தை பெரியாரின் பகுத்தறிவு, பேரறிஞர் அண்ணாவின் எளியவர் ஏற்றம், முத்தமிழறிஞர் கலைஞரின் நவீனக் கட்டுமானம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட மு. க. தலைமையிலான 'திராவிட மாடல்', இன்று இந்திய நிலப்பரப்பிற்கே திசைகாட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது.

## 1. பசிப்பிணி போக்கி அறிவு வளர்க்கும் காலைச் சிற்றுண்டித் திட்டம்:




"பசியோடு இருக்கும் பிள்ளைக்குப் பாடத்தில் கவனம் செலுத்துவது கடினம்" என்பதை உணர்ந்த முதலமைச்சர், நீதிக்கட்சி விதைத்த மதிய உணவுத் திட்டம், கலைஞரின் முட்டையுடன் கூடிய சத்தான உணவு இவற்றின் அடுத்த பாய்ச்சலாக 'முதலமைச்சரின் காலைச் சிற்றுண்டித் திட்டத்தை' உருவாக்கினார்.

2025 ஆகஸ்ட் நிலவரப்படி, இத்திட்டம் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டு, தற்போது 20.59 லட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர். இதற்காக ஆண்டுதோறும் ₹600 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது. மாநிலத் திட்டக் குழுவின் ஆய்வின்படி, இத்திட்டத்தால் மாணவர்களின் வருகைப்பதிவு அதிகரித்துள்ளதுடன், ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் மருத்துவமனை அனுமதி விகிதம் 63.2% சரிந்துள்ளது. இது வெறும் உணவு அல்ல; ஆரோக்கியமான தலைமுறையை உருவாக்கும் சமூக முதலீடு!

## 2.உயர்கல்வியின் இரட்டைச் சிறகுகள்:

பெண்ணடிமைத் தனத்தை ஒழித்து பெண்கல்வியைப் போற்றிய பெரியாரின் கனவை 'புதுமைப் பெண்' திட்டம் நனவாக்கியுள்ளது. அதன் தொடர்ச்சியாக மாணவர்களுக்காகத் தொடங்கப்பட்டதே 'தமிழ்ப் புதல்வன்' திட்டம். 2024-25 நிதியாண்டில் 4.13 லட்சம் மாணவிகள் புதுமைப் பெண் திட்டத்தின் கீழும், 3.28 லட்சம் மாணவர்கள் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழும் மாதம் ₹1,000 உதவித்தொகை பெற்றுள்ளனர். இத்திட்டங்கள் அறிமுகமான பிறகு, அரசுப் பள்ளிகளில் பயின்று உயர்கல்வியில் சேரும் மாணவர்களின் விகிதம் (GER) கணிசமாக உயர்ந்துள்ளது. இத்திட்டங்கள் விளிம்புநிலை மாணவர்களின் கல்வியைப் பாதுகாக்கும் 'அரண்'. களாகும்.

## 3. பேராசிரியர் அன்பழகன் கல்வி மேம்பாட்டுத் திட்டம்:

அரசுப் பள்ளிகளின் உள்கட்டமைப்பைத் தனியார் பள்ளிகளுக்கு இணையாக மாற்றும் நோக்கில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

2025-26 நிதிநிலை அறிக்கையில் பள்ளி மற்றும் உயர்கல்வித் துறைக்கு மட்டும் ₹55,261 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் பள்ளிக் கட்டமைப்பு வசதிகளுக்காக ₹1,000 கோடி தனியாக ஒதுக்கப்பட்டு, 8,370-க்கும் மேற்பட்ட வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஸ்மார்ட் வகுப்பறைகள் மற்றும் நவீன ஆய்வகங்கள் மூலம் அரசுப் பள்ளிகள் இன்று தரமான கல்வியின் மையங்களாக மாறியுள்ளன.

## 4. திறன் மேம்பாட்டில் 'நான் முதல்வன்':

உலகளாவிய வேலைவாய்ப்புச் சந்தையில் தமிழக இளைஞர்களை முன்னிறுத்தத் தொடங்கப்பட்டதே 'நான் முதல்வன்' திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 41 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. வெறும் பட்டப்படிப்புடன் நிற்காமல், தொழில்துறைக்குத் தேவையான (Industry-ready) திறன்களை மாணவர்கள் பெறுவதால், தமிழகத்தின் வேலைவாய்ப்பு விகிதம் பன்மடங்கு பெருகியுள்ளது.

## 5. சமூக நீதியின் மணிமகுடம்:

7.5% இடஒதுக்கீடு, பொருளாதார வசதியின்றி மருத்துவம் மற்றும் பொறியியல் கனவுகளைத் துறந்த மாணவர்களுக்குத் திராவிட மாடல் அரசு வழங்கிய வரம் இது. இவ் இடஒதுக்கீட்டின் கீழ் பயிலும் 41,038 மாணவர்களின் கல்வி மற்றும் விடுதிக் கட்டணத்திற்காக 2025-26 பட்ஜெட்டில் ₹550 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஏழை எளிவர்களின் பிள்ளைகள் எவ்விதச் செலவுமின்றி மருத்துவக் கல்லூரிகளுக்குள் தலைநிமிர்ந்து நுழைகின்றனர்.

## 6. விடியலின் திசையில் தமிழ்நாடு:

அண்ணல் அம்பேத்கர் வெளிநாட்டுக் கல்வித் திட்டம் மூலம் ஆக்ஸ்போர்டு வரை செல்லும் எளிய மாணவர்கள், 'உலகம் உங்கள் கையில்' திட்டத்தில் மடிக்கணினி பெறும் இளைஞர்கள் எனத் தமிழ்நாட்டின் அறிவுச் சுடர் உலகெங்கும் பரவி வருகிறது.

சமூக நீதி, சமத்துவம், சுயமரியாதை ஆகிய தத்துவங்களின் வழி நின்று, தமிழக மாணவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்கி வரும் திராவிட மாடல் அரசுக்கு ஒவ்வொரு குடிமகனும் துணையாக நின்று, தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்ற உறுதி ஏற்போம்!

ஸ்டாலின் தொடரட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்!

•

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian